செய்தி வெளியீடு எண்: 485 நாள்: 25.07.2018

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.7.2018) தலைமைச் செயலகத்தில், கும்பகோணம் – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எடமலைப்பட்டிப்புதூரில் 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனைக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 9.5.2012 அன்று சட்டப்பேரவை விதி எண் 110 கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற அளவிற்கு பணிமனைகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகங்களால் தமிழ்நாடு முழுவதும் 25 புதிய பணிமனைகள் அமைக்கப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எடமலைப்பட்டிப்புதூரில் 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனைக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இந்தப் புதிய பணிமனை 2.14 ஏக்கர் பரப்பளவில், பராமரிப்புக்கூடம், பண்டகம், தொழிலாளர்கள் ஓய்வறை, கிளை மேலாளர் அறை, பேருந்துகள் கழுவும் தளம் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ். வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9